[6th August 1955

Panchayat Court elections.

* 1988 *Q.*—Sri M. NARAYANA KURUP : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether there is any property qualification fixed for candidates contesting Panchayat Court elections; and

(*b*) if so, when it was fixed and the reasons for its continuance?

The Hon. Sri C. SUBRAMANIAM :—" (*a*) & (*b*) For panchayat courts set up under the Madras Village Courts Act, 1888, a rule issued in 1920 prescribes certain property qualifications which apply to all except Harijans. The object of prescribing this qualification at that time was to ensure that those who are to administer Law in a village through the panchayat court in an honorary capacity should be men of some status. A proposal to have this rule revised is under the consideration of Government.

Where, however, a panchayat is constituted under the Madras Village Panchayats Act, 1950, the panchayat will also function as a court, replacing the panchayat court set up under the earlier Act. No property qualification is prescribed for becoming a member of a panchayat under the new Act."

Sri M. NARAYANA KURUP :—" The Hon. Minister in his reply has guarded himself by saying 'at that time'. Now, inasmuch as the highest posts in our State both at the Centre and in the State do not require any qualification, without considering the matter further, will the Government issue immediately instructions to cancel this out-moded rule?"

The Hon. Sri C. SUBRAMANIAM :—" Consideration does not mean consideration whether to have it or not to have it. Even the cancelling of it has to go through certain routine processes. That is being done."

Sri K. VINAYAKAM :—" Is it necessary for a person to possess any legal knowledge to be a member of this court, or is it given to anybody who has been elected by the people?"

The Hon. Sri C. SUBRAMANIAM :—" No legal qualification is prescribed."

Mr. SPEAKER :—" Questions are over."

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—STATEMENT UNDER RULE 40 *RE* THE PENALTY RATES COLLECTED FROM THE RYOTS IN THE LOWER BHAVANI AREA OF ERODE, GOPI AND DHARAPURAM TALUKS IN COIMBATORE DISTRICT.

Mr. SPEAKER :—" Notices of motions under rule 40 have been received from two hon. Members, namely, Sri N. K. Palanisami and Sri K. T. Raju regarding the penalty rates collected from the ryots in the Lower Bhavani area. I must tell the House that

I have included in the same motion the motions given notice of by the hon. Members Sri Adityan and Sri Arumugam also. There is a slight difference in the wording of the motions. But the subject-matter is the same. Therefore, I am allowing all the hon. Members to have their say in the matter."

* SRI K. T. RAJU :—" The motion I have given notice of is to call the attention of the Minister to a matter of urgent public importance, viz., that the Revenue authorities in the Lower Bhavani irrigation area, are collecting penalty at a very high rate from the peasants who have raised paddy crops in the lands marked as dry during the last season. There were heavy rains during the last sowing season, when water was allowed in the canal also. Due to this fact, the lands became unfit for dry crops and the peasants had no other alternative except raising paddy. Now the penalty levies are demanded from the peasants which, if enforced, would ruin them. The levies are very high as Rs. 105 per acre. It is advisable that the penalty may be waived as a special case.

" கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபையின் 40-வது விதியின் பிரகாரம் நான் கொடுத்திருக்கக்கூடிய பிரேரணை என்னவென்றால் ஈரோடு தாலூகா, லோயர் பவானி பாசனப் பிரதேசத்தில் சென்ற வருஷம்தான் தண்ணீர் விடப்பட்டது. புது வாய்க்கால் ஆனபடியினால் கறையிலிருந்து தண்ணீர் கசிவு ஏற்பட்டதோடு அந்தக் காலத்திலே மழை பெய்த காரணத்தினால் விவசாயிகள், சர்க்கார் குறிப்பிட்டபடி, புஞ்சை தானியம் பயிர் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது. ஆகையால், அந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதிக் கேட்டுக்கொண்டார்கள். ' புஞ்சை தானியம் விதைப்பதற்கு சாத்தியம் இல்லை, ஏராளமான தண்ணீர் குளம் குட்டைகளில் நிரம்பிவிட்ட காரணத்தினால் நெற்பயிரைத் தவிர வேறு ஒன்றும் விவசாயம் செய்ய முடியாது, ஆகவே, நெற்பயிர் விளைவிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் ' என்று அங்குள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் காலாகாலத்தில் விண்ணப்பம் செய்து கொண்டார்கள். அதிகாரிகள் காலாகாலத்தில் அந்த இடத்திற்குப் போய்ப் பார்க்க முடியாததினால் வேறு வழி எதுவுமில்லாமல், பருவம் தவறிவிடும் என்ற காரணத்தினால், அவர்கள் நெற்பயிர் விவசாயம் செய்யவேண்டி ஏற்பட்டது. சட்டத்திற்கு விரோதமாக வேண்டுமென்றே விவசாயிகள் வாய்க்காலிலிருந்து தண்ணீர் எடுத்து நெற்பயிர் விளைவித்தால் அப்பொழுது சர்க்கார் தண்டத் தீர்வை விதிப்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால், எதிர்பாராத விதமாக, மழையும் பெய்ய, வாய்க்காலிலிருந்து கசிவும் ஏற்பட்ட விஷயத்தை கனம் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்ததன்பேரில், தண்டத் தீர்வை விதிக்கக்கூடாது என்று கிளர்ச்சி செய்ததன்பேரில், அந்தத் தண்டத் தீர்வை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நான் இப்பொழுது சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால் இந்தத் தண்ட வரியை ரத்து செய்து விடவேண்டும் என்பதுதான். இது ஒரு பெரிய காரியம் அல்ல. இது புதிய வாய்க்கால் பிரதேசம். ஏற்கெனவே பல அபிவிருத்தி வரிகள் விதிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இந்த தண்ட வரி விதிப்பைக் கண்டு அங்குள்ள விவசாயிகளிடையே ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பீதியை உண்டாக்காமல் தண்டத் தீர்வையை ரத்து செய்யவேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

" இதே வாய்க்கால் பிரதேசத்தில் சென்ற வருஷம் மழையின் காரணமாக தண்ணீர்க் கசிவு ஏற்பட்டு கரை யோரங்களிலுள்ள வீடுகள் இடிந்து விழுந்தன. மராமத்து மந்திரி அவர்கள் இது விஷயமாக வேண்டிய

ஏற்பாடு செய்வதாக வாக்களித்திருக்கிறார். ஆகவே, ஈரோடு தாலூகாவில் ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டத் தீர்வையை ரத்து செய்யவேண்டிய அளவுக்கு கனம் மந்திரி அவர்களுடைய பதில் இருக்கவேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்."

* SRI N. K. PALANISAMY :—" Sir, the motion I have given notice of is to call the attention of the Minister to a matter of urgent public importance, viz., that penalty rates have been collected from the ryots in the Lower Bhavani area of Erode, Gopi and Dharapuram taluks in Coimbatore district for raising paddy crops thus causing difficulties and pauperisation of the ryots.

9-28 a.m. "கனம் சபாநாயகர் அவர்களே, லோயர் பவானி பாசனப் பிரதேசத்தில் தண்ணீர் பாயக்கூடிய இடங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் மீது தண்டத் தீர்வை போடப்பட்டிருக்கிறது என்பது தெரிந்த விஷயம். கனம் மந்திரி அவர்கள் சொல்லலாம், 'ஏற்கெனவே நாங்கள் உத்தரவு போட்டிருக்கிறோம், சர்க்கார் அதிகாரியாகிய தாசில்தார் அனுமதியின் பேரில்தான் நெல் பயிர் வைக்கவேண்டும், இல்லாவிட்டால் வைக்கக்கூடாது, அனுமதியில்லாமல் நெற்பயிர் வைத்தார்கள், ஆகவே தீர்வை போட்டிருக்கிறோம்' என்று. இரண்டு லட்சம் ஏக்கரா நிலங்கள் இருக்கின்றன. எத்தனை இடங்களில் தண்ணீர் கசிந்தது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு எத்தனை அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள் என்பதைச் சர்க்கார் சொல்லமுடியுமா ?

" கனம் மந்திரி அவர்கள் சொல்லலாம் ; 'மேலே இருக்கக்கூடியவர்கள் தண்ணீரை இறைத்து நெற் பயிர் வைத்துக்கொண்டால் கீழே உள்ளவர்களுக்குத் தண்ணீர் போய்ச் சேருவதில்லை' என்று. இன்றைய தினம் பல இடங்களில் தண்ணீர் விட்டும்கூட தூரமாகப் பாயவில்லை. ஆனால், வரி போட்டிருக்கிறார்கள். கோபிசெட்டிப்பாளையம் தாலூகா போன்ற பிரதேசங்களில் இருக்கிறவர்கள் இம்மாதிரி வரிகளைப் போடக்கூடாதென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஈரோடு தாலூகா, கீழ் பவானிப் பாசனப் பிரதேசத்தில் விவசாயிகள்மீது வரி போடக்கூடாதென்றும் அங்குள்ளவர்களுக்கு விலக்களிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்."

MR. SPEAKER :—" The hon. Member is repeating the same points mentioned by Sri K. T. Raju. He may give some new points if he has."

* SRI N. K. PALANISAMY :—" They are collecting illegally, Sir.

" இப்பொழுது ஏராளமான பேர்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். தண்ணீர் விடாமலேயே வரி போட்டிருக்கிறார்கள் என்பதை கனம் மந்திரி அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நிலவரி, தண்ணீர்த் தீர்வை, தண்ட வரி ஆகியவைகள் தண்ணீர் பாயாமலேயே போடப்பட்டிருக்கின்றன. அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் மிகவும் கொதிப்படைந்திருக்கிறார்கள். ரெவினியூ போர்டு மெம்பர் ஸ்ரீ டி. என். எஸ். ராகவன் வந்து பார்த்து விட்டுப் போனபோது தண்ட வரியை ரெவினியூ போர்டு ரத்து செய்யும் என்று சொன்னபிறகும்கூட தண்ட வரி போட்டார்கள். பிறகு அது நிறுத்தி வைக்கப்பட்டதுபற்றி சர்க்காருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த வரி போடாமல் ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த தண்ட வரி போடப்பட்டதால் ஜனங்கள் மிகவும் கொதிப்படைந்திருக்கிறார்கள்."

* SRI S. T. ADITYAN :—" கனம் சபாநாயகர் அவர்களே, கீழ் பவானித் திட்டத்திற்கும் திருநெல்வேலிக்கும் ஒரு வித்தியாசம் என்னவென்றால் கீழ் பவானித் திட்டத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டால்

தான் வரி, திருநெல்வேலி ஜில்லாவில் **(Compounded double crop land)** தண்ணீர் வந்தாலும் சரி, தண்ணீர் வராவிட்டாலும் சரி, பயிர் விளைந்தாலும் சரி, பயிர் விளையாவிட்டாலும் சரி, ஒரு எக்கருக்கு கிட்டத்தட்ட ரூ. 20 அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டும். இரண்டு போகத்திற்கும் சேர்த்து கிஸ்தி வசூலிக்கப்படுகிறது. இரண்டு போகப் பயிர்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும் என்று அரசாங்கத்தார் உத்தரவாதம் அளித்திருந்தபோதிலும்கூட, அதன்படி கிஸ்தி வசூலித்துக் கொண்டிருந்தும்கூட, பலவித காரணங்களால் அந்த விதமாக தண்ணீர் கொடுக்க முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமையில் இருந்துங்கூட அனேகமாக ஒரே ஒரு போகம் மாத்திரம் விளைந்துகொண்டிருக்கிறது. இரண்டாவது போகம் விளைவது இல்லை. இந்த வருஷம் விளைந்தது. அநேக இடங்களில் தண்ட வரி போடப்பட்டிருக்கிறது. எக்கருக்கு ரூ. 100 வரையிலுங்கூட அநேக இடங்களில் தண்ட வரி போட்டிருக்கிறார்கள்.

" அந்தத் தீர்வை போட்டிருக்கிற அநேக இடங்கள் தேங்கலான வாய்க்கால் நிலங்கள். வீணாகக் கடலுக்குப் போகும் கழிவுத் தண்ணீரை எடுத்து பயிர் செய்தாலும் அந்த இடங்களுக்கும் தண்டத் தீர்வை போட்டிருக்கிறார்கள்.

" 50 வருஷமாக நஞ்சையைத் தவிர புஞ்சை விளையக்கூடிய பள்ளங்கள், அந்த இடங்களுக்கும் தீர்வை போட்டிருக்கிறார்கள்.

" கூடிய சீக்கிரம் மணிமுத்தாறு திட்டம் வரப்போகிறது. அந்தத் திட்டம் வந்து சாஸ்வதமாக தண்ணீர் சப்ளை செய்யமுடியும். மணிமுத்தாறிலிருந்து நாங்கள் தண்ணீர் கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிற இடங்களில்கூட போட்டிருக்கிறார்கள்.

" ஒரு கிராமத்தில் 20 எக்கர் இருக்கும். அந்த 20 எக்கர் நிலமானது தலைக்கு அரை எக்கர் வீதம் 40 புள்ளிகளின் கையில் இருக்கும். அந்த 40 புள்ளிகளும் தனித் தனியாக மனுப்போட வேண்டுமென்று கேட்கிறார்கள். வக்கீல் வைத்து தனித் தனியாக ஒவ்வொருவரும் மனுப் போடுவதென்றால் செலவு ஜாஸ்தியாகும். ஆகவே, ஒரே மனுவாக ஏற்றுக்கொண்டு இம்மாதிரி வரியை அநேகமாக ரத்து செய்து விடும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, on the various representations from the ayacutdars of the Lower Bhavani Project area, the Government passed orders in G.O. No. 3015, Revenue, dated 19th October 1954, that the cultivation of groundnut and gingelly might also be allowed in addition to cotton and millets subject to the understanding that no water would be made available before the 15th September or so, when the canals would be opened for irrigation. The Government also ordered that cultivation of tobacco, chillies, turmeric, castor, tapioca, yams and pulses might be allowed in the Project area in fields which have the support of wells. No new wells or deepening of existing wells would, however, be permitted in the Project area for the present, that is, until the Project has been functioning for some years. The cultivation of tobacco, chillies, turmeric, castor, tapioca, yams and pulses would be limited to 25 per cent of the maximum extent irrigated under the well in any one fasli during the last ten faslis. If, during the same fasli, the same piece of land has been irrigated for two crops or more, its extent would be

9-34 a.m.

counted only once for determining the maximum extent. On the remaining 75 per cent of the ayacut under wells, all the crops permitted for the Project in general, viz., cotton, millets, groundnut, gingelly, etc., would be allowed and also pulses and castor as mixed crops. In the case of mixed crops, only the appropriate highest water cess would be charged. The cultivation of sugarcane, betels and plantains has been prohibited except that back yard cultivation of plantains and vegetables has been allowed to the extent of 10 cents for each existing well without any penalty. Further, scattered fruit trees, coconuts and plantains have also been allowed but not on a field scale, i.e., trees not exceeding 10 in number per acre.

" As regards cultivation of paddy, the Government in the Public Works Department have ordered in G.O. No. 2624, P.W., dated 28th July 1954, that pending localization and zoning of ayacut, which will be finalized after watching the progress of cultivation during the next two years such of the lands as are percolation affected will continue to be classed as dry and appropriate water cess and penalty as usual will be charged, if paddy is grown out of necessity, but the jamabandi officer may examine each case and remit the penalty in full, if he is satisfied that by reason of seepage the land could not possibly have been cultivated with dry crops. This concession will be for each fasli year until observational data is collected for some years and will be subject to revision and cancellation at any time and from any fasli and subject to the condition that canal water will not be allowed in excess of what is required for an irrigated dry crop, the lands being classified only as ' dry ' till a final decision is reached. The particulars mentioned above were already given to the hon. Members on the floor of the House on 17th February 1955 in reply to question No. 1042 put by the hon. Member Sri N. K. Palanisamy.

" Sir, petitions and representations have recently been received against levy of penalties for the cultivation of paddy. In this connection, I may also tell the House that there is a keen competition between the Communist Party and the Praja Socialist Party as to who should win the laurels in this agitation. But, the Government are not concerned with that. We want to do the right and just thing in the circumstances. The Government have examined the case in detail and have come to the conclusion that the levy of penal assessment for cultivation of prohibited crops in the area should be decided by the local Revenue authorities on the merits of each case based on the orders mentioned above.

" Sir, with regard to the question of Tirunelveli district, I am not in a position to make a definite statement just now."

SRI K. T. RAJU :—" Sir, . . ."

Mr. SPEAKER :—" There cannot be any debate on this matter."

* **Sri K. T. RAJU** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சோஷலிஸ்டுக் கட்சிக்கும் இடையே யாதொரு விதமான அபிப்பிராய பேதமோ, தகராரோ கிடையாது. இரண்டு கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தினர்களும் இங்கே இருக்கிறோம். விவசாயிகள் மீது போடக்கூடிய தண்ட வரியை ரத்து செய்யவேண்டுமென்பதில் எங்களுக்குள் அபிப்பிராய பேதமே கிடையாது. நண்பர் ஸ்ரீ கே. ஆர். நல்லசிவம் அவர்கள்கூட இங்கேதான் இருக்கிறார். வேண்டுமானால் கேட்டுக்கொள்ளலாம். எப்படியாவது தண்டவரியை ரத்து செய்யவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம்."

* **Sri N. K. PALANISAMY** :—" கனம் மந்திரி அவர்கள் சரிவர பதில் சொல்லாமலேயே சர்க்கார் உத்திரவைப் படித்துவிட்டார். ஏதோ தவறுதலாக புது வாய்க்காலிலிருந்து தண்ணீர் எடுத்து நெற் பயிர் சாகுபடி செய்துவிட்டார்கள். அதற்காக தண்டத் தீர்வை போட்டிருப்பதினால் அங்கேயுள்ள விவசாயிகளுக்கு கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வரியை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ஆனால் அதற்கு மந்திரி அவர்கள் பதில் சொல்லவில்லை."

Report of the District Revenue Administration Enquiry Committe—Request for discussion.

Sri M. NARAYANA KURUP :—" Mr. Speaker, a very important report, viz., the Report of the District Revenue Administration Enquiry Committee and the decisions of the Government on it have been placed on the table of the House. These are very important documents. I would like to know whether this House will be given an opportunity to express its opinion on the same."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" I shall consider the suggestion of the hon. Member."

III.—GOVERNMENT BILL.

THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION BILL, 1955.

* The Hon. Sri M. A. MANICKAVELU :—" Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Cultivating Tenants Protection Bill [a], 1955 and move—

'*That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 30 Members, 20 Members from the Assembly and 10 members from the Council to consider the Madras Cultivating Tenants Protection Bill, 1955, and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee.*'

" I will give the names of Members later on, Sir.

" As already stated by the Governor in his Address certain Constitutional and legal difficulties have arisen in implementing the comprehensive land reforms which are under the consideration of the Government and they are examining how best to overcome the difficulties.

---

a Published in *Fort St. George Gazette*, dated 3rd August 1955.